எடுத்துக்கொண்டு வரும் முறையை மாற்றுவதற்காக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதைப்பற்றிச் சட்டத்துறையிலே பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுமக்கள், அமைச்சரவர்கள் கூறியதைப்போல அச்சமில்லாமல் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வசதியாக அந்த எம். பி. ஆர். என்பவரை அரசு முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் அவரைப் பற்றிக் கிரிமினல் குற்றச்சாட்டு என்ற அளவில் தகவல்களைத் தருவார்களேயானால் துன்புறுத்தி, மிரட்டி, பொதுமக்களிடம் வசூலிக்கிறார்கள். என்று சொல்வார்களேயானால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்க இயலும்.

மாண்புமிகு ரமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் காரிலே போகிறபொழுதே கூட, ஆண்டவன் திருவுலா வருகிற பொழுது விழுந்து வணங்காத பக்தர்கள், அவர் காரிலே போகிற பொழுது விழுந்து வணங்குகிறார்கள், அல்லது வணங்க வைத்திருக்கிறார்கள் என்று. அந்நிலை இருக்குமேயானால் முதலிலே அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு கோவை மாவட்ட அல்லது பெரியார் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முயற்சி எடுத்துக் கொள்வார்களேயானால், ஒரு மாதத்திற்குள்ளே அந்த அறநிலையத்தைப் பற்றிய நல்ல முடிவுகளை நம்முடைய அரசாங்கம் எடுக்க முடியும்.

செஞ்சியில் விவசாய விளைபொருள் விற்பனைக்கூடம் கட்டும் திட்டம்.

*வினா எண். 774—**திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சியில் விவசாய விளைபொருள் விற்பனைக் கூடம் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் விரைவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்,

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, எப்பொழுது கட்டப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நில எடுப்பு சட்டத்தின் படி 27-1-1981 அன்று 4.17 ஏக்கர் நிலமும், 11-3-1981 அன்று 0.31 ஏக்கர் நிலமும் கையகப் படுத்தப்பட்டுள்ளன. அதற்காக வருவாய்த் துறைக்குப் பணமும் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே விரைவில் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படலாம்.

சின்னதாராபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 775—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னதாராபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 30-3-1981 ல் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் துவங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 776 முதல் 779 வரை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

அரசு மருத்துவ மனைகளிலுள்ள நுட்பமான கருவிகள்.

*வினா எண். 780—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு மருத்துவ மனைகளில் நுட்பமான கருவிகளை செப்பனிடத் தெரிந்தவர்கள் இல்லையென்பதால் ஏராளமாக செலவிட்டுத் தருவிக்கப்பட்ட பல கருவிகள் செயல்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழு செப்பனிடப்படும்,